7ம் தரம்

## எமது புராதன வாழ்க்கை முறை

### பகுதி - A

01) பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்க.

(i) உலகின் புராதன விவசாய முறை (பெருந்தோட்ட விவசாயம் / சேனைப்பயிர்ச்செய்கை)

(ii) அறுவடை செய்யப்பட்ட நெல்லைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணம் (நெற்குதிர் / பெட்டகம்)

(iii) பாலைப் பெற்றுக்கொள்வதற்கு வளர்க்கப்பட்ட பசுக்கள் (கிரகெரி / பஸ்கோரச) என அழைக்கப்பட்டது.

(iv) மாடு வளர்ப்பவர்கள் வாழ்ந்த கிராமம் (வாவிகாம / கோபாலகம)

(v) மாடுகளின் முதுகில் பொருட்களைக் கொண்டு செல்லும் முறை (தவளம் / சுமைதாங்கி) என அழைக்கப்பட்டது.

(5 புள்ளிகள்)

02) (i) X பகுதியில் கைத்தொழில் ஈடுபட்டவர்களும் Y பகுதியில் அவர்கள் அழைக்கப்பட்ட முறைகளும் தரப்பட்டுள்ளது. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| X | Y |
|---|---|
| 1) இரும்புத் தொழிலில் ஈடுபட்டோர் | A - தம்பகர |
| 2) செப்புத் தொழிலில் ஈடுபட்டோர் | B - மணிகார |
| 3) தங்கத் தொழிலில் ஈடுபட்டோர் | C - கம்மாளர் |
| 4) இரத்தினக்கல் அகழ்தலில் ஈடுபட்டோர் | D - சுவர்ணகார |

(1) CADB (2) ABCD (3) DCBA (4) CBAD

(ii) லோகங்களைப் பயன்படுத்தி செய்யப்பட்ட பொருட்கள் X இலும் அவற்றைத் தயாரிக்கப் பயன்பட்ட உலோகங்கள் Y இலும் தரப்பட்டுள்ளது. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| X | Y |
|---|---|
| 1) நெற்றிப்பட்டம் | A - இரும்பு |
| 2) குத்துவிளக்கு | B - மண் |
| 3) செங்கல் | C - தங்கம் |
| 4) கேடயம் | D - செம்பு |

(1) ABCD (2) CDBA (3) DCBA (4) BCAD



29

(iii) வர்த்தகத்துடன் தொடர்புபட்ட விடயங்கள் *X*, *Y* என்ற இருபகுதிகளில் பிரித்துத் தரப்பட்டுள்ளது. அவற்றினை ஒன்றிணைத்து பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| X | | Y |
|---|---|---|
| 1) | நிகம் | A - இலங்கையின் வணிக நகரம் |
| 2) | புக | B - நகரங்கள் |
| 3) | படுன்கம் | C - வர்த்தக அமைப்புக்கள் |
| 4) | மாகம | D - புராதன வணிக கிராமங்கள் |

(1) ABCD (2) DCBA (3) BCDA (4) BDCA

(15 புள்ளிகள்)

**03) புராதன காலத்தில் வெளிநாட்டு வியாபாரத்தில் முக்கியம் பெற்றிருந்த துறைமுகங்கள், வர்த்தக நகரங்கள் இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. துறைமுகங்களின் பெயர்களைச் சரியாகப் பெயரிடுக.**


1) மாதோட்டம் ..................................

2) கொடவாய ..................................

3) கோகன்ன ..................................

4) அநுராதகம ..................................

5) மாகம ..................................




15 புள்ளிகள்)

## பகுதி - B

**04) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடை தருக.**

(i) புராதன இலங்கை மக்களின் வாழ்வாதார முறைகள் மூன்றும் எவை?

..........................................................................................................

..........................................................................................................

.......................................................................................................... (3 புள்ளி)

(ii) முற்காலத்தில் இலங்கை மக்களின் வாழிடம்

.......................................................................................................... (1 புள்ளி)

**07)** சுருக்கமான விடை தருக.

(i) நெற்செய்கைப் போகங்கள் மூன்றினையும் தருக.

......................................................................................................

......................................................................................................

...................................................................................................... (3 புள்ளி)

(ii) நெற்செய்கைப் போகங்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பெயர்

...................................................................................................... (1 புள்ளி)

(iii) நெற்பயிர்ச்செய்கையைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முறைகள் இரண்டு தருக.

......................................................................................................

...................................................................................................... (2 புள்ளி)

(iv) பண்டமாற்று முறை என்றால் என்ன?

......................................................................................................

...................................................................................................... (2 புள்ளி)

(v) இலங்கையின் புராதன நகரங்களில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் 3 தருக.

......................................................................................................

......................................................................................................

...................................................................................................... (2 புள்ளி)

## தகவல் பத்திரம்

❖ புராதன மக்களின் வாழ்வாதார முறை
- ✶ விவசாயம் - விலங்கு வளர்ப்பு
- ✶ கைத்தொழில்
- ✶ வர்த்தகம்

ஆகிய மூன்று துறைகளின் கீழ் இடம்பெற்றது.

❖ முற்காலத்தில் இலங்கை மக்களின் வாழிடம் கிராமங்கள்

❖ விவசாயத்தின் இரு வகைகள்

1. சேனைப் பயிர்ச்செய்கை அல்லது மேட்டு நிலப் பயிர்ச்செய்கை
2. நெற்செய்கை அல்லது சேற்று நிலப்பயிர்ச்செய்கை

**சேனைப் பயிர்ச்செய்கை**

- ✶ தானியங்கள்
- ✶ மரக்கறிகள்
- ✶ கிழங்குகள் - சேனைகளில் பயிரிடப்பட்டன.
- ✶ மழை நீரை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- ✶ உலகின் புராதன விவசாயமுறை
- ✶ சேனைப்பயிர்ச்செய்கை என்பது

காட்டைத் தீயிட்டுக் கொழுத்திய பின்னர் துப்பரவு செய்து பெற்றுக் கொள்ளப்படும் நிலத்தில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கை.

**சேனைப் பயிர்ச்செய்கையின் படிமுறைகள் :**

- சேனைப் பயிர்ச்செய்கைக்காக நிலம் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளுதல்.
- காட்டை அழித்து தீயிட்டுக் கொளுத்தி அதனைச் சுத்திகரித்துக் கொள்ளுதல்.
- மரம், அடிப்பகுதிகள் என்பவற்றைத் தீயிட்டுப் பொசுக்கி நிலத்தைப் பண்படுத்திக் கொள்ளுதல்.

(iii) விவசாயத்தின் இருவகைகளையும் தருக.

.......................................................................................................................

....................................................................................................................... (2 புள்ளி)

(iv) சேனைப் பயிர்ச்செய்கை என்றால் என்ன?

....................................................................................................................... (2 புள்ளி)

(v) சேனைப் பயிர்ச்செய்கையின் சிறப்புப் பெயர்கள் 2 தருக.

.......................................................................................................................

....................................................................................................................... (2 புள்ளி)

05) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துக.

(i) தீயிட்டுப் புதிதாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலம் ........................................ எனப்படும்.

(ii) சேனைகளில் பயிரிடப்பட்ட நெல் ........................................ என அழைக்கப்பட்டது.

(iii) ........................................ என்பது பானையைத் தலையாகக் கொண்டு செய்யப்பட்ட வெருளி.


(iv) புராதன கல்வெட்டுக்களில் கிராமக் குளங்களின் உரிமையாளர்கள் ........................................ என அழைக்கப்பட்டனர்.

(v) ........................................ மன்னன் மின்னேரியாக் குளத்தைக் கட்டினான்.

(5 புள்ளிகள்)

06) தரப்பட்ட உலகப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

(i) இலங்கை (ii) இந்தியா (iii) சீனா (iv) பாரசீகம் (v) உரோம்



(5 புள்ளிகள்)

* தீயிட்டு புதிதாக உருவாக்கிக் கொள்ளப்பட்ட நிலம் - நவதெளி சேனை எனப்படும்.
* யானை
பன்றி
மான்
மரை
முள்ளம்பன்றி
குரங்கு
} போன்ற விலங்குகளிடம் இருந்து சேனையைப் பாதுகாக்க வேண்டியிருந்தது.
* சேனையைப் பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்
  - கம்புகளினால் வேலியை அமைத்தல்
  - பாதுகாப்பிற்காக தீ மூட்டுதல்
  - குடிசைகளில் (பரண்) தங்கிப் பயிர்களைப் பாதுகாத்தல்.
* சேனைகளில் பயிரிடப்பட்ட உலர் தானியப் பயிர்கள்
  - திணை
  - சாமை
  - குரக்கன்
* சேனைகளில் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள்
  - பயறு
  - இஞ்சி
  - கடுகு
  - கரைநெல்
  - எள்ளு
  - பருத்தி
  - கரும்பு
* மரக்கறி வகைகள்
  - வட்டுக்காய்
  - கத்தரிக்காய்
  - சுண்டைக்காய்
  - சாம்பல் வாழை
  - பூசணி
* கிழங்கு வகைகள்
  - சிறுகிழங்கு
  - வற்றாளை
* கரை நெல் என்பது - சேனைகளில் பயிரிடப்பட்ட நெல்
* கரை நெல்லைக் குறிக்கும் வேறொரு பெயர் - சாலி
* சேனைச் செய்கையில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள்
  - வீச்சரிவாள்
  - மண்வெட்டி
  - அரிவாள்
* சேனைப் பயிர்ச்செய்கைக்குரிய சொற்பிரயோகங்கள்
  - நவதெனி சேனை - புதிய சேனைநிலங்கள்
  - கினியாதிகாவ - காடுகளுக்குத் தீயிட முன்னர் அங்குள்ள விலங்குகளை விரட்டுவதற்கு ஒலி எழுப்புவது
  - ஹெலிகடா - பானையைத் தலையாகக் கொண்டு செய்யப்படும் வெருளி

**சேற்று நில விவசாயம் :-**

சேற்றுநிலப் பயிர்ச்செய்கை < நெற்பயிர்ச்செய்கை / நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கை எனவும் பெயர் பெற்றது.

* நீர்ப்பாசன உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.
* அணைகள் கட்டி, குளங்களை உருவாக்கி வயல்களுக்கு நீரைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.
* அனுராதபுர காலத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு குளம் இருந்துள்ளது.
* இவை குளக் கிராமங்கள் என அழைக்கப்பட்டது.
* புராதன கல்வெட்டுக்களில்

வெவ்ஹமிக
வபிஹமிக எனக் குறிப்பிடப்பட்டிருந்தது, இது கிராமக் குளங்களை அமைத்தவர்களையோ, அல்லது அதன் உரிமையளாளர்களை குறிக்கப் பயன் பட்டிருக்கலாம்.

* மின்னேரியாக் குளத்தை உருவாக்கிய மன்னன் - மகாசேனன்
* சிறப்புப் பெயர் - மின்னேரியாத் தெய்வம்
* நெற்செய்கை வருடத்தில் இருமுறை மேற்கொள்ளப்பட்டது.
* அவை போகங்கள் என அழைக்கப்பட்டன.
* நெற்செய்கைப் போகங்கள்
    - பெரும்போகம் - (மகாபோகம்)
    - சிறுபோகம் (யாலபோகம்)

  இடைப்போகமும் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

நெற்செய்கைப் போகங்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு - தோணிகல கல்வெட்டு அதில்

* அகலஹஸ - (பெரும்போகம்)
* மெதஹஸ (இடைப்போகம்)
* பிட தடஹஸ (சிறுபோகம்)

பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வயலைத் தயார்படுத்துவதற்கு விவசாயிகள் மேற்கொண்ட முயற்சிகள்**

* நிலத்தைப் பண்படுத்தல் - உழுதல்
* புல், பூண்டுகள் பசளையாகப் பயன்படுத்தப்பட்டது.
* நீர்ப்பாசனத்திற்கு ஏற்றமுறையில் நிலத்தை வடிவமைத்தமை
* பண்படுத்தப்பட்ட நிலத்தில் நெல் விதைக்கப்பட்டது.
* நெற்பயிர்ச்செய்கைக்கு கிருமிகளாலும் பறவைகளாலும் பாதிப்பு ஏற்பட்டது.

**நெல்பயிர்ச்செய்கையைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட பாரம்பரிய முறைகள்**

* வயலிலும், வரப்பிலும் தென்னோலைகள் நடப்பட்டமை
* எண்ணெயில் நனைக்கப்பட்ட திரிகளை எரித்தல் - துணியைக் கிழித்து திரிகளாக்கி இலுப்பெண்ணையில் ஊறவைத்து அவற்றைக் கட்டி எரிப்பதன் மூலம் ஈக்கள் கட்டுப்படுத்தப்பட்டது.

**வயற்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள்**

  ஏர், மட்டப்பலகை, அரிவாள், மண்வெட்டி

* மனித உழைப்பு முக்கியம் பெற்றது.
* அறுவடை செய்யப்பட்ட நெல் எருதுகளைக் கொண்டு சூடடிக்கப்பட்டு நெல் வேறாக்கப்பட்டது.
* அறுவடை செய்த நெல்லை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக நெற்குதிர்களை நிர்மாணித்தனர்.
* நெல் - பச்சை அரிசி

  புழுங்கல் அரிசியாகப் பாவிக்கப்பட்டது.

**விலங்கு வளர்ப்பு**

  விலங்கு வளர்ப்பின் மூலம்

  - பால்
  - இறைச்சி
  - முட்டை என்பன பெற்றுக்கொள்ளப்பட்டது.

* விவசாயம் / போக்குவரத்து } என்பவற்றிற்காக மிருகங்கள் வளர்க்கப்பட்டன.

**வளர்க்கப்பட்ட விலங்குகள்**

- ஆடு
- மாடு
- பன்றி
- கோழி

மாடு - பசு

- பால்
- விவசாயம்
- போக்குவரத்து

பாலைப் பெற்றுக்கொள்ள வளர்க்கப்பட்ட பசுக்கள் - கிரகெரி எனப்பட்டது.

பசுவில் இருந்து பெறப்பட்ட பொருட்கள்

✱ பால் ✱ மோர் ✱ நெய் ✱ தயிர்

✱ வெண்ணெய் இவை பஞ்சரப் பொருட்கள் (பஸ்கோரச) எனப்பட்டது.

✱ இறைச்சிக்காக மாடுகள் வளர்க்கப்படவில்லை.

✱ மாட்டு இறைச்சி உணவிற்காகப் பயன்படுத்தப்படவில்லை.

✱ மாட்டை வளர்ப்பவர்கள் கோபாலர்கள் எனக் குறிப்பிடப்பட்டனர்.

✱ மாடு வளர்ப்பவர்கள் வாழ்ந்த கிராமங்கள் - கோபாலகம என அழைக்கப்பட்டது.

✱ மனிதர்கள், பொருட்களைக் கொண்டு செல்வதற்கு மாட்டு வண்டிகள் பயன்படுத்தப்பட்டன.

✱ மாடுகளின் முதுகில் பொருட்களை ஏற்றிச் செல்வது 1ம் தவளம் முறை எனக் குறிப்பிடப்பட்டது.

✱ முட்டை இறைச்சி என்பவற்றுக்காக கோழிகள் வளர்க்கப்பட்டன.

✱ பால், இறைச்சி - ஆடுகள் வளர்க்கப்பட்டன.

**கைத்தொழில்**

கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் கைவினைஞர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்

| | | |
|---|---|---|
| இரும்புத் தொழில் செய்வோர் | - | லோகுரு - (கம்மாளர்) |
| செப்புத் தொழில் செய்வோர் | - | தம்பகர (கம்மாளர்) |
| தங்கம் தொழில் செய்வோர் | - | ரன்கருவன் (சுவர்ணகார) |
| மண் தொழில் செய்வோர் | - | கும்பகார, கும்பல்லு, குயவர் |
| இரத்தினக்கல் தொழில் செய்வோர் | - | மணிகார / இரத்தினக் கல்பட்டை தீட்டுவோர் |
| பஞ்சு | - | பெஹகார நெசவாளர் |

**இரும்பில் செய்யப்பட்ட உபகரணங்கள்**

- மண்வெட்டி
- கத்தி
- கோடரி
- அரிவாள்
- ஏர்
- வாள்
- கேடயம்
- ஈட்டி
- அம்பு

**தங்கம்**

- மாலை
- வளையல்
- தோடு
- நெற்றிப்பட்டம்

**செம்பு**

- கோவில்மணி
- குத்துவிளக்கு

**மண்**

- மட்பாண்டம்
- ஓடு
- செங்கல்

**வர்த்தகம்**

✱ முற்கால ஜீவனோபாய மார்க்கங்களில் ஒன்று வர்த்தகம்

வர்த்தகம்

- உள்நாட்டு வர்த்தகம்
  - ✷ நாட்டின் உள்ளே இடம்பெற்றது.
  - ✷ பண்டமாற்று முறை பின்பற்றப்பட்டது.
- வெளிநாட்டு வர்த்தகம்
  - ✷ அந்நிய நாடுகளுடன் நாட்டிற்கு வெளியே இடம் பெற்றது.

✷ பண்டமாற்றுமுறை

- பொருட்களைக் கொடுத்து பொருட்களைப் பெறுவது.
- பணத்திற்குப் பதிலாக பொருட்கள் பரிமாறப்பட்டன.

✷ இலங்கையின் வணிக நகரங்கள்

- அனுராதபுரம்
- மாகம

நகரங்கள் வரலாற்று மூலாதாரங்களில் - நிகம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புராதன கால வர்த்தக அமைப்புக்கள் - புக
புராதன வணிகக் கிராமங்கள் - பட்டணகம் / படுன்கம என அழைக்கப்பட்டன.

**நகரங்களில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள்**

- மட் பாத்திரம்
- ஆபரணங்கள்
- குடிபானம்
- புடவை
- உணவு
- வாசனைத் திரவியங்கள்

✷ சந்தை நிர்வாகம் தொடர்பாகக் கூறும் கல்வெட்டு - பதுளைத்தூண் கல்வெட்டு (4ம் உதயன் காலம்)

**சந்தை ஒன்றின் சட்டதிட்டங்கள்**

- சந்தைக்குக் கொண்டு வரப்படும் பொருட்கள் இடைவழியில் சென்று கொள்வனவு செய்யக்கூடாது.
- அனுமதி பெறாத தராசு, படிகளைப் பாவிக்கக்கூடாது.
- வெற்றிலை, பாக்கு என்பவற்றைக் குறிக்கப்பட்ட மண்டபங்களில் வைத்து விற்கவேண்டும்.
- சந்தைக்கு கொண்டு வரப்படும் பொருட்கள் விற்பனை செய்தால் வரி அறவிடப்பட வேண்டும்.

**வெளிநாட்டு வர்த்தகம் :-**

✷ **இலங்கை தொடர்பு வைத்திருந்த நாடுகள் :-**

- இந்தியா
- உரோம்
- அரேபியா
- சீனா
- பாரசீகம்
- தென்கிழக்கு ஆசிய நாடுகள்

**இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள்**

- யானைத் தந்தம்
- இரத்தினக் கற்கள்
- மருந்து வகைகள்
- யானைகள்
- முத்து
- வாசனைத் திரவியங்கள்
- பெறுமதி வாய்ந்த மரங்கள்

**அத்தம் முறை :-**

* உழைப்பிற்கு உழைப்பைப் பரிமாறிக்கொள்ளும் முறை - அத்தம் முறை எனப்படுகின்றது.
* இலங்கை மக்கள் பெரும்பாலானவர்களின் வாழ்வாதாரம் விவசாயம்.
* விவசாய நடவடிக்கைகளுக்கு குறிப்பாக அறுவடை செய்தல் போன்றவற்றிற்கு பெருந்தொகையான தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். அயலவர்களைத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டதுடன் ஒருவரோடு ஒருவர் நற்புறவுடனும் ஒத்துழைப்புடனும் உதவி புரிந்து வாழும் பண்பும் வளர்ச்சியடைந்தது.

**திருமணம்**

* புராதன காலத்தில் திருமணம் கௌரவமான ஒன்றாகக் கருதப்பட்டது. ஏனெனில் குடும்பம் என்கிற அமைப்பு ஒன்று உருவாகியது திருமணத்தின் பின்பே ஆகும்.
* பெண்கள் பெற்றோரின் பாதுகாப்புடன் வளர்க்கப்பட்டதுடன், உணவு சமைத்தல், வீட்டை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருத்தல் போன்றவற்றில் பயிற்சியும் வழங்கப்பட்டது.
* சாலிய இளவரசனின் மனைவியான அசோகமாலா சுவையான உணவு சமைத்ததாக சந்தர் மலங்காராவில் குறிப்பிடப்பட்டுள்ளது.
* சமையல் கலையில் சிறப்புப் பெற்ற பெண்கள் "மதுபாச்சிகா" என அழைக்கப்பட்டனர்.

**மரணச் சடங்கு**

* இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளல்
* அஸ்தியைப் புதைத்தல்
* சடலங்களைக் காட்டிலுள்ள கல்லறைகளில் வைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.
* பண்டுகாபய மன்னன் காலத்தில் பிணங்களை எடுத்துச் செல்வதற்கு 150 புலயர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.
* சூத்திரர்களுக்கு தனியான மயானம் இருந்ததாக மகாவம்சத்தில் கூறப்பட்டது.

**பழக்க வழக்கங்களும் பண்பாடும் :-**

* பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் முக்கியம் பெற்றிருக்கின்றது.
* மூத்தோரை மதித்தல்
* அவர்களைக் கௌரவித்தல் போன்ற பண்புகள் அரசர் முதல் சாதாரண மக்கள் வரை அனைவரிடமும் காணப்பட்டது.

**கலாசாரம்**

**இலங்கை**

* சிங்கள
* தமிழ்
* முஸ்லீம்கள் வாழ்கின்ற பன்மைக் கலாசாரத்தைக் கொண்ட நாடாகும்.

**கலாசாரம் என்பதனை**

குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் வாழ்கின்ற மக்கள் குழுவினரின்

- நடத்தை
- நம்பிக்கைகள்
- சமூகப் பழக்கங்கள்
- ஆடை, ஆபரணங்கள்
- உணவுப் பழக்கங்கள்
- விழுமியங்கள்
- இரசனை

என்பவற்றின் ஒன்றிணைவைக் குறிப்பதாகும்.

* தேவநம்பியதீசன் காலத்தில் இலங்கையில் பௌத்த சமயம் அறிமுகமானது.

பௌத்தம் பரவியதால்

* புராதன சமூகத்திற்கு ஒழுக்கமும் போதனையும் கிடைக்கப் பெற்றது.
* ஒருவருக்கு ஒருவர் உதவி உபகாரம் புரிந்து கொண்டு வாழும் அந்நியோன்னிய வாழ்வு முறை வளர்ச்சியுற்றது.
* தாது கோபங்களை நிர்மாணித்தல்
* விகாரைகளைக் கட்டுதல்
* குளங்கள் கட்டுதல்
* அணைகள் கட்டுதல்
* தெருக்களை அமைத்தல்

போன்ற பணிகளில் எல்லோரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செயற்பட்டுள்ளனர்.

* இலங்கை இரத்தினக் கற்களுக்குப் புகழ் பெற்றமையால் அது இரத்தினதுவீபம் என அழைக்கப்பட்டது.

**வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்**

- பீங்காண்
- பட்டுத்துணி
- நறுமணப் பொருட்கள்
- குதிரைகள்

**வெளிநாட்டு வியாபாரத்தில் முக்கியம் பெற்றிருந்த துறைமுகங்கள்**

- மாதோட்டம் (மன்னார்)
- கோகண்ண (திருகோணமலை)
- கொடவாய (அம்பாந்தோட்டை)

* ருவான்வெலிசாயவை அலங்கரிப்பதற்காக அனுராதபுரத்தை ஆட்சி செய்த பாதிகாபய மன்னன் கண்ணாடி மணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக உரோமாபுரிக்குத் தூதுவர்களை அனுப்பியதாக மூலாதாரங்களில் குறிப்பிட்டுள்ளது.
* இந்தியா, பாரசீகக் கப்பல்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளன.
* துறைமுகங்களுக்கு வரும் கப்பல்களில் வரி அறவிடுவதற்காக அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இருந்தனர். தீர்வை (வரி) அறவிடுவது இவர்களின் பொறுப்பாக இருந்துள்ளது.
  கொடவாய துறைமுகத்தில் வரி அறவிடப்பட்டது தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளது.

# எமது கீர்த்திமிக்க அரசர்கள்

## பகுதி – A

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

I.

(01) வசபனுடைய வம்சம்

இலம்பகர்ணவம்சம் / மோரிய வம்சம்

(02) தாதுசேனனுடைய வம்சம்

இலம்பகர்ணவம்சம் / மோரிய வம்சம்

(03) Iம் சேனனின் வம்சம்

மோரியவம்சம் / மானவர்மவம்சம்

(04) மானவர்மனின் தந்தை

Iம் காசியப்பன் / 2ம் காசியப்பன்

(05) மானவர்மனுக்கு ஆதரவு அளித்த தென்னிந்திய அரசு

பாண்டிய அரசு / பல்லவ அரசு

(06) மானவர்மன் போரிட்ட இலங்கை மன்னன்

2ம் தாடோபதசன் / Iம் காசியப்பன்

(07) முதலாம் சேனனின் தந்தை

2ம் தப்புல / Iம் தப்புல

(08) இலங்கையை ஸ்ரீமாற ஸ்ரீவல்லப மன்னன் ஆக்கிரமித்தபோது இலங்கையை ஆட்சி செய்த மன்னன்

Iம் சேனன் / 2ம் அக்போ

(09) மிகிந்தலையில் வைத்தியசாலையை அமைத்த மன்னன்

Iம் சேனன் / 2ம் சேனன்

(10) பாண்டியரால் கொண்டு செல்லப்பட்ட இலங்கையின் செல்வங்களை மீட்டெடுத்த மன்னன்

IIம் சேனன் / Iம் சேனன்

(10 புள்ளி)

**II.** சரியான விடைகளைத் தருக.

(01) 2ம் சேனனனின் திறமையான தளபதி

..........................................................................................

(02) இலங்கை மன்னனால் பாண்டிய அரசனாக முடிசூட்டப்பட்டவன்

..........................................................................................

(03) 2ம் சேனனின் பாண்டிய ஆக்கிரமிப்புப் பற்றிக் குறிப்பிடப்பட்ட கல்வெட்டு கண்டெடுக்கப்பட்ட இடம்

..........................................................................................

(04) மத்திய ஆட்சியின் உயர் நிர்வாகி

..........................................................................................

(05) ஆவண நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரி

..........................................................................................

(5 புள்ளி)

## பகுதி - B

(01) 2ம் சேனனின் பணிகள் 3 தருக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(02) அநுராதபுர காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த அரசுரிமை முறைகள் 2 தருக.

..........................................................................................

..........................................................................................

(03) பட்டாபிஷேகம் என்றால் என்ன?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(04) மன்னனுக்குரிய கடமைகள் 4 தருக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(05) அரச அதிகாரிகளில் முக்கியமானவர்கள் மூவரைத் தருக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(10 புள்ளி)

III.

(01) X பகுதியில் புராதன கால பதவிகளும் Y இல் அப்பதவிக்குரிய கடமைகளும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்திச் சரியான விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

| X | | Y |
|---|---|---|
| கம்லத்தன் | - | A குதிரைப் பணிப்பாளர் |
| அதெகவரு | - | B யானைப் பணிப்பாளர் |
| அவுஅதெக | - | C பணிப்பாளர் |
| அதி அதிக | - | D கிராமங்களை நிர்வகித்தவர் |

1) DCAB
2) BACD
3) DCBA
4) DACB

(02) புராதன இலங்கையில் பயன்படுத்தப்பட்ட சில சொற்றொடர்கள், விடயங்கள் X பகுதியிலும் அவற்றின் பொருள் கல்வெட்டுகள் Y பகுதியிலும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்திச் சரியான விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

| X | | Y |
|---|---|---|
| சட்டதிட்டம் | - | A மன்னர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை |
| அத்தானிதூண் | - | B கணக்குப் புத்தகம் |
| பெரசிரித | - | C அரச கொடுப்பனவு பற்றிய கல்வெட்டு |
| பஞ்ஷிகா | - | D வேவெல் கெட்டிய கல்வெட்டு |

1) ABCD
2) DACB
3) DCAB
4) DBCA

(03) X பகுதியில் மன்னர்களும் Y பகுதியில் அவர்கள் வைத்தியத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பும் தரப்பட்டுள்ளது. அவற்றைத் தொடர்புபடுத்திச் சரியான விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

| X | | Y |
|---|---|---|
| புத்ததாசன் | - A | தொற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியசாலை |
| 1ம் உபதிஸ்ஸ | - B | வைத்தியசாலைகளுக்கு காணி வழங்கியமை |
| 1ம் உதயன் | - C | 10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியரை நியமித்தமை |
| 5ம் காசியப்பன் | - D | பார்வை இழந்தவர்களுக்கும் நோயாளிகளுக்கும் வைத்தியசாலை அமைத்தமை. |

1) CDBA
2) DCBA
3) CBAD
4) DCBA

(04) X பகுதியில் தென்னிந்திய அரசுகளும் Y பகுதியில் அவற்றின் தலைநகரங்களும் தரப்பட்டுள்ளது. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

| X | Y |
|---|---|
| சோழப்பேரரசு | A காஞ்சிபுரம் |
| பாண்டியஅரசு | B தஞ்சாவூர் |
| பல்லவ அரசு | C மதுரை |

1) ABC
2) BAC
3) ACB
4) CBA

(05) X பகுதியில் தென்னிந்திய அரசர்களும் Y பகுதியில் அவர்களின் இராச்சியப் பெயர்களும் தரப்பட்டுள்ளன. அவற்றை தொடர்புபடுத்தி சரியான விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

| X | Y |
|---|---|
| இராஜராஜன் | - A பாண்டிய அரசு |
| நரேந்திரசிம்மன் | - B சோழ அரசு |
| ஸ்ரீமாற ஸ்ரீ வல்லவன் | - C பல்லவ அரசு |


1) ABC
2) CAB
3) CBA
4) BCA

(10 புள்ளி)

IV. தரப்பட்ட இந்தியப் படத்தில்

1. சோழநாடு
2. பாண்டியநாடு
3. பல்லவநாடு
4. கிருஷ்ணாநதி
5. இலங்கை என்பவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(10 புள்ளி)



## தகவல் பத்திரம்

**(01) எமது கீர்த்திமிக்க அரசர்கள்**

மானவர்மன் (2ம் காசியப்பனின் மகன்)

↓ 5ஆம் அக்போ ↓ 3ஆம் காசியப்பன் ↓ 1ம் மகிந்தன்

5ஆம் அக்போ
↓
3ஆம் காசியப்பன்
↓
1ஆம் மகிந்தன்
↓
6 ஆம் அக்போ (3ஆம் காசியப்பனின் மகன்)
↓
7ஆம் அப்போ (1ஆம் மகிந்தனின் மகன்)
↓
↓
2ஆம் மகிந்தன் (6ஆம் அக்போவின் மகன்) சலமேவன் மிஹிந்து
↓
1 ஆம் உதயன் (2ம் மகிந்தனின் மகன்)

↓ 3 ஆம் மகிந்தன் ↓ 8ஆம் அக்போ ↓ 2ம் தப்புல

3 ஆம் மகிந்தன்
↓
8ஆம் அப்போ
↓
2ம் தப்புல
↓

↓ 1ஆம் சேனன் ↓ உதயன் ↓ மகிந்தன் ↓ ஆதிபாதகாசியப்பன்

9ம் அப்போ
↓

ஆதிபாத காசியப்பன்

↓ 2ஆம் சேனன் ↓ 2ஆம் உதயன் ↓ 4ஆம் காசியப்பன்

1ஆம் சேனன்
↓
2ஆம் சேனன் (2ஆம் தப்புலவின் மகன்)
↓
2ஆம் உதயன்
↓
4ஆம் காசியப்பன்
↓
5ஆம் காசியப்பன் (2 ஆம் சேனனின் மகன்)
↓
3ஆம் தப்புல
↓
4ஆம் தப்புல (3ஆம் தப்புலவின் தம்பி)
↓
3ஆம் உதயன் (1ஆம் சேனனின் தம்பி மகிந்தனின் மகன்)
↓
3ஆம் சேனன் (3ஆம் உதயனின் தம்பி)
↓
4ஆம் உதயன் (4ஆம் காசியப்பனின் மகன்)
↓
4ஆம் சேனன் (யாருடைய மகன் என்ற தகவல் இல்லை)
↓
4ஆம் மகிந்தன் (4ஆம் காசியப்பனின் மகள் தேவாவின் மகன்)

↓ 5ஆம் சேனன் ↓ 5ஆம் மகிந்தன் ↓ உதயன்

5ஆம் சேனன்
↓
5ஆம் மகிந்தன் (5ஆம் சேனனின் தம்பி)

**மானவர்ம வம்சம்**

- மானவர்மன் 2 ஆம் காசியப்பனின் மகன்
- தந்தையின் மரணத்தின் பின் நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலையில் இந்தியா சென்று நரசிம்ம பல்லவனின் படையில் கடமையாற்றினான்.
- பல்லவர் - சாளுக்கியருக்கு எதிரான போரில் பல்லவர் சார்பில் போரிட்டான்.
- பல்லவ படையுடன் இலங்கை வந்து அநுராதபுரத்தைக் கைப்பற்றினான் எனினும் அது நீடிக்கவில்லை.
- நரசிம்ம பல்லவன் நோய்வாய்ப்பட்டதனால் பல்லவ படை திரும்பிச் சென்றது.
- மானவர்மனும் பல்லவ நாட்டைச் சென்றடைந்தான்.
- 20 வருடங்களின் பின் மீண்டும் இலங்கை வந்து, இலங்கையைக் கைப்பற்றினான்.

**மானவர்மனின் பொருளாதாரப் பணிகள்**

- பயிர்ச்செய்கை, நீர்ப்பாசன நடவடிக்கைகளில் சீர்திருத்தம் மேற்கொண்டான்.
- எட்டு குளங்கள் அமைத்ததாகப் பூஜாவலிய குறிப்பிடுகின்றது.

**1 ஆம் சேனன் காலத்தில்**

- ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லவ பாண்டியன் இலங்கையை ஆக்கிரமித்து வெற்றி பெற்றான்.
- செல்வம் சூறையாடப்பட்டது.
- பாண்டியனுடன் நட்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- அநுராதபுரம் மீண்டும் சேனனிடம் ஒப்படைக்கப்பட்டது.

**2ஆம் சேனன்**

- நீண்டகால ஆட்சி.
- சமாதானம் நிலவியது.
- சமய கட்டடங்கள் நிறுவப்பட்டன.
- சமய நிறுவனங்களுக்கு கிராமங்கள் தானம் அளிக்கப்பட்டது.
- மிகிந்தலையில் வைத்தியசாலை அமைத்தான்.
- ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லப பாண்டியனின் மகன் 2 ஆம் வரகுணன் 2ஆம் சேனனின் உதவியை நாடி இலங்கை வந்தான்.
- குட்டா என்னும் படைத்தலைவனின் தலைமையில் உதவிப்படையை இந்தியாவிற்கு அனுப்பி பாண்டியப்படையைத் தோற்கடித்தான்.
- வரகுணன் பாண்டிய அரசனாக முடிசூட்டப்பட்டான்.
- (சிங்கள மன்னனொருவன் வெளிநாட்டில் வெற்றி பெற்று அந்நாட்டு மன்னனை அரியணையில் அமர்த்தியது இதுவே முதற்தடவையாகும்)
- 1ஆம் சேனன் காலத்தில்கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டன.

**2ஆம் சேனனின் பாண்டிய ஆக்கிரமிப்புப் பற்றி அறிய உதவுவது**

- 5 ஆம் காசியப்பன்
- 4 ஆம் தப்புலன்

ஆகியோரின் கல்வெட்டுக்கள் ஆகும்.

**இந்திய ஆக்கிரமிப்பின் பின் 2 ஆம் சேனன் மதுராதுனு சிறிசங்கபோ விருதுப் பெயர்களைப் பயன்படுத்தியதாக குறிப்பிடப்படுகின்றது.**

அனுராதபுரத்தை ஆட்சி செய்த வம்சங்களும் அரசர்களும்

இலம்பகர்ண வம்சம் - வசபன்

மோரிய வம்சம் - தாதுசேனன்

மானவர்மன் - 5ம் மகிந்தன் வரை மானவர்ம அரச வம்சம்

**அரசாட்சி அமைப்பு முறை :**

1) மத்திய ஆட்சி – மன்னனும் மன்னனுக்கு உதவும் அதிகாரிகள் குழுவும்

2) பிரதேச ஆட்சி – பிரதேசங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மூலம் நடத்தப்பட்டது.

**அரசனுக்கு உதவும் அதிகாரிகள்**

யுவராஜன்

சேனாதிபதி

பொருளாளர்

ஆவணப்படுத்துபவர்

அதெகவரு - பணிப்பாளர்

அவுஅதெக - குதிரைப் பணிப்பாளர்

அதிஅதிக - யானைப் பணிப்பாளர்

கிராம நிர்வாகி - கம்லத்தன்

- புராதன காலத்தில் இருந்த சட்டதிட்டங்கள் தொடர்பாக அறிய உதவும் கல்வெட்டு – வேவல் கெட்டிய கல்வெட்டு.
- அந்தானி தூண் எனப்படுவது அரச கொடுப்பனவு குறித்த கல்வெட்டு ஆகும்.
- பெரசிரித – என்பது முன்பு மன்னர்களால் கடைப்பிடிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை.
- பஞ்சிகா – கணக்குப் புத்தகம் விகாரைக் கணக்குள் எழுதி பேணப்பட்டது.
- வைத்தியத்துறைக்கு உதவி புரிந்த மன்னர்கள்

  புத்ததாசன்

  1ம் உபதிஸ்ஸ

  1ம் உதயன்


  5ம் காசியப்பன்

  இலங்கையின் மீது ஆக்கிரமிப்பு மேற்கொண்ட தென்னிந்திய இராச்சியங்களும் தலைநகரங்களும்

  பாண்டிய அரசு – மதுரை

  சோழப்பேரரசு – தஞ்சாவூர்

  பல்வ அரசு – காஞ்சிபுரம்


கிருஷ்ணாநதி
பல்லவநாடு
சோழநாடு
பாண்டியநாடு
இலங்கை